பதன் காரணமாக அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை; அந்த இடங்களை மலைவாழ் டணிப்படி வழங்கும் இடங்களாக அறிவிக்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மலைவாழ் பகுதியாக வேறு எவை, எவை எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை; தனிக் கேள்வி போடவும்.

பெரிய தாழையில் ஐஸ் பிளாண்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 793—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சாத்தான்குளம் தொகுதி பெரிய தாழையில் அமைக்க திட்டமிட்டு வேலை செய்ய தேவையான உபகரணங்கள் சேகரிக்கப்பெற்ற ஐஸ் பிளாண்ட் வேலை வருடக்கணக்கில் தொடங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணமென்ன?

(இ) வேலையை விரைவில் முடிக்க உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சாத்தான்குளம் தொகுதி பெரியதாழையில் பனிப்பொறி மற்றும் குளிர்பதன நிலையம் (Ice plant cum cold storage) ஒன்று அமைப்பதற்கான பணிகளை முடிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) மின்சார வாரியம் நிலையத்திற்கான மின் இணைப்பை 17-1-1981 அன்று வழங்கியுள்ளது. இயந்திரங்களை நிர்மாணிக்க இன்னும் சில கட்டிடப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இக் கட்டிடப் பணிகள் 1981 மே திங்களுக்குள் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின் நிலையம் செயல்படத் தொடங்கும்.

1981 ஏப்ரல் 20]

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, இந்தக் குளிர்சாதன நிலையத்தை அங்கே அமைக்க வேண்டுமென்று முடிவு செய்து, தேவையான உபகரணங்கள் எல்லாம் வந்தும் சுமார் 3 ஆண்டுகள் ஆகியும் அது இன்னும் வேலை தொடங்கவில்லை. ஏற்கனவே அங்குள்ள மக்கள் பெரும்பாலும் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பிடிக்கிற மீன்களை கொச்சி, எர்னாக்குளம் போன்ற இடங்களுக்கு கொண்டு சென்று விற்கவேண்டியிருக்கிறது. அதற்கு போக்குவரத்து வசதியும் சரியாக இல்லை. ஆகையால் அந்தக் குளிர்சாதன நிலையத்தை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு ஜனவரியில் அந்த நிலையத்திற்கு மின் இணைப்புத் தரப்பட்டிருக்கிறது. சில கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன ; இன்னும் சில கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். மே இறுதிக்குள் அந்த வேலைகள் எல்லாம் முடிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஜூன் திங்களிலிருந்து செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மே இறுதிக்குள் வேலைகள் எல்லாம் முடிந்துவிடும் என்று சொன்னார்கள் ; மிக்க மகிழ்ச்சி. இந்த ஐஸ் பிளாண்ட் ஆரம்பிக்கப்படுவதன் மூலமாக அங்கே வேலையில்லாமல் இருக்கிற தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வசதி இருக்கும். ஆகையால் உடனடியாக அது வேலை தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் அங்கே இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற சூழ்நிலைகளை ஒட்டி ஆராய்ந்துதான் முடிவு எடுக்க முடியும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, கடற்கரைப் பகுதிகளை விட்டு தள்ளியிருக்கிற ஊர்களில் கடல் மீன் கிடைப்பது அரிதாக இருக்கிற காரணத்தால் அரசே வாகன வசதி செய்து, எல்லாப் பகுதிகளுக்கும் கடல் மீன் வழங்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய செய்திக்குறிப்பு இல்லை.